# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, பொது வசதிகள் சபை (திருத்தச்) சட்டம்

---

(2003 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2003, ஓகத்து மாதம் 22 ஆந் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

# 2003 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, பொது வசதிகள் சபை (திருத்தச்) சட்டம்

[2003 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச. வ— ஓ. 53/2001
4727

## 1973 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, பொது வசதிகள் சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது, 2003 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, பொது வசதிகள் சபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1973 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, பொது வசதிகள் சபைச் சட்டத்துக்கான விரிவுப்பெயர், "இடவசதிக் கூறுகளுக்கான பொதுவசதிகளையும் பொது அம்சங்களையும் கட்டுப்படுத்துவதற்கும், முகாமை செய்வதற்கும், பேணுவதற்கும், நிருவகித்தற்கும் எனவும், அவற்றிற்குப் பொது வசதிகளை ஏற்பாடுசெய்வதற்கெனவும், பொது வசதிகள் சபை என அறியப்படும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கூட்டாட்சி ஆதனத்தையும் பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தையும் தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனத்தையும் கட்டுப்படுத்துவதற்கும் முகாமை செய்வதற்கும் பேணுவதற்கும் நிருவகித்தற்கும் எனவும் அவற்றிற்குப் பொது வசதிகளை ஏற்பாடு செய்வதற்கெனவும் கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபை என அறியப்படும்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது. 1973 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துதல்.

3. (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்திலும் — "பொது வசதிகள் சபைச் சட்டம்", "பொது வசதிகள் சபை" மற்றும் "சபை" என்பன "கூட்டாட்சியாதன முகாமை

(அ) "பொது வசதிகள் சபைச் சட்டம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபைச் சட்டம்" என்னும் சொற்கள் இடப்படுதல் வேண்டும் :

அதிகாரசபைச் சட்டம் "கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபை" மற்றும் "அதிகார சபை" என அறியப்படுதல்.

(ஆ) பொதுவசதிகள் சபையைக் குறிக்கும் "பொதுவசதிகள் சபை" மற்றும் "சபை" என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே "கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபை" மற்றும் "அதிகாரசபை" என்னுஞ் சொற்கள் இடப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் அறிவித்தலில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், செய்தித் தெரிவிப்பில் அல்லது வேறு ஆவணத்தில் "பொது வசதிகள் சபைச் சட்டம்" அத்துடன் "பொது வசதிகள் சபை" பற்றிய குறிப்பீடு ஒவ்வொன்றும் முறையே "கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபைச் சட்டம்" அத்துடன் "கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபை" பற்றிய குறிப்பீடொன்றாக வாசிக்கப்பட்டுப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டுப் பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

"சட்டத்தின் ஏற்புடைமை.

4. (இதனகத்துப் பின்னர் "கூட்டாட்சி ஆதனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஒரே காணித் துண்டாக வைத்திருக்கப்படும் பராதீனப்படுத்தப் பட்ட காணி மீது சிறு கூறுகளாக உபபிரிவாக்கஞ் செய்யப்படக்கூடிய இரண்டு அல்லது அதற்கு மேற் பட்ட மாடிகளைக் கொண்டுள்ள ஏதேனும் கட்டிடத்துக்கு அல்லது கட்டிடங்களுக்கு அத்துடன் அதே காணி மீது சிறு கூறுகளாக உப பிரிவாக்கஞ் செய்யப்படக்கூடிய ஒரேயொரு மாடியை மாத்திரம் கொண்டுள்ள ஏதேனும் கட்டிடத்துக்கு அல்லது கட்டிடங்களுக்கு, (இதனகத்துப்பின்னர் "தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஒரே காணித்துண்டாக வைத்திருக்கப்படும் பராதீனப்படுத்தப்பட்ட காணி மீது நிர்மாணிக்கப்பட உத்தேசிக்கப்படும் அல்லது நிர்மாணிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் சிறுகூறுகளாக உபபிரிவாக்கஞ் செய்யப்படக் கூடிய, ஏதேனும் கட்டிடத்துக்கு, அத்துடன் (இதனகத்திதன்பின்னர் "பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்)

பதிவுசெய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சி யாதன வரைபடத்தில் காட்டப்பட்ட தனித்த உறைவிடத்துக்குப் பொருத்தமான ஒன்றுக்கு மேற்பட்ட கட்டிமுடிக்கப்பட்ட கூட்டாட்சியாதனச் சிறுகூறுகள் உள்ள, பகுதியளவில் கட்டிமுடிக்கப்பட்ட ஏதேனும் கட்டிடத்துக்கு இச்சட்டம் ஏற்புடையதாதல் வேண்டும்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டுப் பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

"அதிகார சபையின் குறிக்கோள்கள்

5. பின்வருவன அதிகாரசபையின் குறிக்கோள்களாதல் வேண்டும் :—

(அ) கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளையும் பொது அம்சங்களையும் பொது வசதிகளையும் கட்டுப்படுத்தி, முகாமை செய்து, பேணி அத்துடன் நிருவகித்தல் ;

(ஆ) கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் பொது அம்சங்களும் பொது வசதிகளும் நல்லநிலைமையில் முறையாகப் பேணப்படுவதனையும், அத்தகைய ஆதனத்தை நல்ல நிலையிலும் சேவையாற்றத்தகு ஒழுங்கிலும் பேணுவதற்காகப் பருவத்துக்குப் பருவம் பழுது பார்ப்பு வேலைகள் கொண்டுநடாத்தப்படுவதனையும் உறுதிப்படுத்தலும் அத்தகைய செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்கு முகாமைக் கூட்டுத்தாபனத்துக்கு அல்லது சொந்தக்காரருக்கு அல்லது சொந்தக்காரர்களுக்கு அல்லது இருப்பாட்சியாளர்களுக்கு உதவிபுரி

தலும் அல்லது முகாமைக் கூட்டுத் தாபனம் அல்லது சொந்தக்காரர் அல்லது சொந்தக்காரர்கள் அல்லது இருப்பாட்சியாளர்கள் அத்தகைய செயற்பாடுகளைக் கொண்டு நடாத்தத் தவறும்பட்சத்தில், அத்தகைய செயற்பாடுகளுடன் நேரடியாக ஈடுபட்டிருத்தலும் ;

(இ) அத்தகைய கூட்டாட்சியாதன சிறுகூறுகளை உள்ளடக்கும் எல்லாக் கட்டிடங்களும் தீவிபத்து, உள்நாட்டுக் குழப்பம் அல்லது கலகங்கள் என்பவற்றுக்கெதிராகக் காப்புறுதி செய்துகொள்ளப்பட்டன என்பதை உறுதிப்படுத்துதல் அல்லது முகாமைக் கூட்டுத்தாபனத்தினால் அல்லது சொந்தக்காரர்களால் அவ்வாறு வேண்டிக்கொள்ளப்பட்டால் காப்புறுதி செய்தல் அல்லது காப்புறுதி செய்துவைத்திருத்தல் அத்துடன் விடயத்துக்கேற்றாற்போல முகாமைக் கூட்டுத்தாபனத்திடமிருந்து அல்லது சொந்தக்காரர்களிடமிருந்து அத்தகைய கட்டுப்பணத்தை அல்லது கட்டணங்களை அறவிடுதல் ;

(ஈ) கூட்டாட்சி ஆதனத்தின் பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சி ஆதன வரைபடத்துக்கு அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் பதிவுசெய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்துக்கு முரணாக, அத்தகைய கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் அந்தந்தச் சொந்தக்காரர்களினால் அல்லது இருப்பாட்சியாளர்களினால் நிர்மாணிக்கப்பட்ட அல்லது கொண்டுநடாத்தப்பட்ட அத்தகைய அதிகாரமளிக்கப்படாத நிர்மாணிப்புகள் எல்லாவற்றையும் அகற்றுதல் ;

(உ) கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் முகாமைக் கூட்டுத்தாபனங்கள் முறையாகப் பணியாற்

றுகின்றனவா என்பதை உறுதிப்படுத்தலும் அத்தகைய முகாமைக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை முகாமைசெய்தலும் நிருவகித்தலும் :

(ஊ) அத்தகைய கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் சொந்தக்காரருக்கு அல்லது சொந்தக்காரர்களுக்கு அல்லது இருப்பாட்சியாளர்களுக்கு நீர், சாக்கடை, வடிகால், வாயு, மின்சாரம், குப்பைகூளம் அகற்றுதல், குளிரூட்டல், தொலைபேசி, வானொலி மற்றும் மீளப்பரப்பு சேவைகள் போன்ற சேவைகளை ஏற்பாடுசெய்வதில் கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியள விலான கூட்டாட்சி ஆதனத்தின் கூட்டாட்சி யாதனச் சிறுகூறுகளின் முகாமைக் கூட்டுத்தாபனத்துக்கு அல்லது சொந்தக் காரருக்கு அல்லது சொந்தக்காரர்களுக்கு அல்லது இருப்பாட்சியாளர்களுக்கு உதவிபுரிதல் ;

(எ) அத்தகைய கூட்டாட்சி ஆதனச் சிறுகூறு களின் சொந்தக்காரர்களினால் அல்லது இருப்பாட்சியாளர்களினால் பயன்படுத்தப் படுவதற்கான வீதிகள், அணுகுவழிகள், புற்றரைகள், தோட்டங்கள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் வேறு திறந்த வெளியிடங்கள் போன்ற வசதி களைத் தாபிப்பதற்கும் பேணுவதற்கும் முகாமைக் கூட்டுத்தாபனத்துக்கு உதவி புரிதல் அல்லது முகாமைக் கூட்டுத்தாப னங்கள் அத்தகைய வசதிகளைத் தாபித் துப் பேணத் தவறும்பட்சத்தில், அத்தகைய செயற்பாடுகளில் நேரடியாக ஈடுபடுதல் ;

(ஏ) கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியள விலான கூட்டாட்சி ஆதனத்தின் கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் சொந்தக்

காரர்களினால் அல்லது இருப்பாட்சியாளர்களினால் பயன்படுத்தப்படுவதற்காக, வீதிகள், அணுகுவழிகள், புற்றரைகள், தோட்டங்கள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் வேறு திறந்த வெளியிடங்கள் என்பவற்றின் பராமரிப்பை உள்ளூர் அதிகாரசபைக்குக் கைமாற்றுதல்:

(ஐ) முகாமைக் கூட்டுத்தாபனத்தின் அல்லது அதன் சொந்தக்காரர்களின் அல்லது இருப்பாட்சியாளர்களின் வேண்டுகோளின் பேரில் கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் அத்தகைய கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளுக்குப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புச் சேவைகளை வழங்குதல் ;

(ஒ) பாதிப்புக்குள்ளாவோரின் நலன்கள் பாதுகாக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கும் அத்தகைய நலன்களைப் பாதுகாப்பதற்கு அவசியமானவிடத்தெல்லாம் தலையிட்டுத் தடுப்பதற்கும் பதிவுசெய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சி ஆதன நிர்மாணத்தின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல் ;

(ஓ) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படுவதற்கென, மூலதன முதலீட்டுத் திட்டங்கள் உட்பட, கூட்டாட்சி ஆதன மீள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதலும் அமைச்சருக்குச் சமர்ப்பித்தலும் ;

(ஔ) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படக் கூடியவாறான அத்தகைய நிகழ்ச்சித்திட்டத்தின் அத்தகைய கூட்டாட்சியாதன மீள் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் நடைமுறைப்படுத்தலைப் பொறுப்பேற்குமாறு

அல்லது கூட்டாட்சியாதன மீள் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் நிறைவேற்றலைப் பொறுப்பேற்குமாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையை அல்லது நகர அபிவிருத்தி அதிகாரசபையை அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகார சபையை அல்லது ஏதேனும் அரசாங்க முகவர் நிலையத்தை அல்லது எவரேனும் தனியார்துறை வீடமைப்பு அபிவிருத்தியாளரை வேண்டிக்கொள்ளுதல் ;

(க) எவரேனும் சொந்தக்காரர் அத்தகைய கருத்திட்டத்தைப் பூரணப்படுத்தத் தவறும் பட்சத்தில், பதிவுசெய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தில் அல்லது தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட ஏதேனும் கூட்டாட்சியாதனக் கட்டிடத்தைக் கட்டிமுடிக்கப் பொறுப்பேற்றல் ;

(ங) அதிகாரசபையின் குறிக்கோள்களுள் எதனையும் கொண்டுநடாத்துவதற்காகக் காணியை அபிவிருத்தி செய்தல் அல்லது மீள் அபிவிருத்தி செய்தல் ; அத்துடன்

(ச) மேற்படி குறிக்கோள்களுள் எதனையும் அல்லது எல்லாவற்றையும் எய்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அல்லது உசிதமாகக்கூடியவாறான அத்தகைய மற்றெல்லாச் செயல்களையும் செய்தல்.".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டுப் பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

"அதிகார சபையின் தத்துவங்கள். 6. அதிகாரசபையானது அதன் குறிக்கோள்களை முறையாகக் கொண்டுநடாத்துவதற்காக,

பின்வரும் தத்துவங்களுள் ஏதேனும் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றைப் பிரயோகித்தல் வேண்டும் :—

(அ) ஏதேனும் அசைவற்ற அல்லது அசைவுள்ள ஆதனத்தைக் கொள்ளுதல், உரித்தாக்குதல், மானியம் அல்லது கொள்வனைமூலம் கொள்ளுதல் அல்லது கொடைவகையாக அல்லது வேறுவிதமாகப் பெறுதல் அத்துடன் அத்தகைய ஆதனத்தை வைத்திருத்தல், முகாமைசெய்தல், விற்றல், ஒப்படைத்தல், கொடுத்து மாற்றுதல், குத்தகைக்கு விடுதல் அல்லது வேறு வகையாகக் கையுதிர்த்தல் ;

(ஆ) உள்ளூரிலாயினுஞ்சரி வெளிநாட்டிலாயினுஞ்சரி ஏதேனும் மூலத்திலிருந்து நன்கொடைகளையும் மரணசாதனக் கையளிப்புகளையும் பெறுதல் ;

(இ) பணிகளை நிறைவேற்றுவதில் அதனால் தேவைப்படுத்தப்படும் பணங்களைக் கடனாகப் பெறுதல் ;

(ஈ) அதிகாரசபையினால் வாடகைக்கு விடப்பட்ட ஏதேனும் காணிச் சிறுகூறுக்காக அல்லது கட்டிடங்களுக்காக அல்லது கூட்டாட்சி ஆதனத்துக்காக வாடகை விதித்தல் ;

(உ) இச்சட்டத்தின்கீழ் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் அதிகார சபையினால் ஆற்றப்பட்ட எவையேனும் சேவைகளுக்காக கட்டணங்கள் அல்லது இறுப்பனவுகள் விதித்தல் ;

(ஊ) கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளில் சொந்தக்காரர்களுக்குள்ள அக்கறைகளுக்கு விகிதாசாரமாக அவர்களிடமிருந்து எவையேனும் கட்டுப்பணங்கள் அறவிடுதல் ;

(எ) கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் பொது வசதிகளுக்கு அல்லது பொது அம்சங்களுக்குச் சொந்தக்காரர் உட்பட, எவரேனும் ஆளினால் விளைவிக்கப்பட்ட ஏதேனும் சேதத்தைச் சீர்செய்வதில் உறப்பட்ட செலவுகளை அவரிடமிருந்து அறவிடுதல் ;

(ஏ) முகாமைக் கூட்டுத்தாபனத்தின் அல்லது கூட்டாட்சியாதனச் சிறுகூறின் சொந்தக்காரரின் அல்லது இருப்பாட்சியாளரின் வேண்டுகோளின்பேரில், ஏதேனும் கூட்டாட்சியாதனச் சிறுகூறின் மறுசீரமைப்பு, பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு உட்பட்ட எவையேனும் சேவைகளை அதற்கு வழங்குதலும் அதற்கான இறுப்பனவுகளை விதித்தலும் ;

(ஐ) கட்டிட நிர்மாண வேலையைப் பொறுப்பேற்றல் ;

(ஒ) ஏனைய கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளுக்கும் அல்லது கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் பொது அம்சங்களுக்கும் வசதிகள் அளிப்பனவாய குழாய்கள், கம்பிகள், வடங்கள், கம்பிவடக் குழாய்கள் என்பவற்றைப் பரிசோதிக்கும், பழுதுபார்க்கும் அல்லது புதுப்பிக்கும் நோக்

கத்துக்காக அல்லது கூட்டாட்சி ஆதனத்தின் கூட்டாட்சியாதனச் சிறுகூறை அல்லது பொது வசதிகளை அல்லது பொது அம்சங்களைப் பராமரிக்கும், புதுப்பிக்கும், மறுசீரமைக்கும் அல்லது பழுதுபார்க்கும் நோக்கத்துக்காக அல்லது கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் அதிகாரமளிக்கப்படாத கட்டிட நிர்மாணங்களை அகற்றும் அல்லது இடித்தழிக்கும் நோக்கத்துக்காக அல்லது எவையேனும் இயைபான நியதிச்சட்டத் தேவைப்பாடுகள் இணங்கியொழுகப் படுகின்றனவா என நிச்சயப்படுத்தும் நோக்கத்துக்காக அல்லது இப்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட தத்துவங்களுள் எதனையும் பிரயோகிப்பதில் நியாயமான எல்லா வேளைகளிலும் ஏதேனும் கூட்டாட்சியாதனச் சிறுகூறுக்குள், ஒன்றில் தாமாக அல்லது அதன் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட முகவர்மூலம், நுழைதல் :

(ஓ) பதிவுசெய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சி ஆதன வரைபடத்தில் காட்டப்பட்ட கட்டிட நிர்மாணத்தின் முன்னேற்றத்தைப் பார்வையிட்டு மீளாய்வுசெய்யும் நோக்கத்துக்காக, தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனத்தின் ஏதேனும் காணிச் சிறுகூறுக்குள், நியாயமான எல்லா வேளைகளிலும், ஒன்றில் தாமாக அல்லது அதன் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் மூலம் நுழைதல் ;

(ஔ) அதிகாரசபையின் குறிக்கோள்களுள் எதனையும் நிறைவேற்றும் நோக்கத்

துக்காக நியாயமானளவு தேவைப்படும் வாறான அத்தகைய ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளுதல் மற்றும் அத்தகைய உடன்பாட்டொழுங்குகளைச் செய்தல் :

(க) கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பதிவுசெய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனத்தின் முகாமைக் கூட்டுத்தாபனத்துக்கும் சொந்தக்காரருக்கும் அல்லது சொந்தக்காரருக்கும் இருப்பாட்சியாளருக்கும் அல்லது சொந்தக்காரருக்கும் கொள்வனைகாரருக்கும் அல்லது சொந்தக்காரருக்கும் ஈடுபெற்றவருக்கும் அல்லது ஈடுபெற்றவருக்கும் உத்தேச கொள்வனைகாரருக்கும் அல்லது ஈடுவைத்தவருக்கும் ஈடுபெற்றவருக்கும் இடையேயான பிணக்குகளைத் தீர்த்தல் :

(ங) அதிகாரசபையின் வேலையைக் கொண்டுநடாத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் தொழிலுக்கமர்த்துதலும் அதன் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் :

(ச) அதிகாரசபையின் அலுவல்களை நிருவகிப்பதற்கான விதிகளை ஆக்குதல் : அத்துடன்

(ஞ) அதிகாரசபையின் அபிப்பிராயப்படி, அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதனை இயலச்செய்வதற்கு அவசியமான எல்லா விடயங்களையும் செய்தல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டுப் பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

"கூட்டாட்சி ஆதனத்தின் பொது வசதிகள் மற்றும் பொது அம்சங்களின் கட்டுப்பாடு பராமரிப்பு முதலியவற்றை அதிகாரசபை பொறுப்பேற்றல்.

7. வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாகவுள்ளது எது எப்படியிருப்பினும், அதிகாரசபை, அமைச்சரினால் ஆக்கப்பட்ட பணிப்புரை ஒன்றன் மீது அல்லது எல்லாக் கூட்டாட்சி ஆதனச் சிறுகூறுகளினதும் சொந்தக்காரர்களால் அல்லது முகாமைக் கூட்டுத்தாபனத்தால் அல்லது உள்ளூரதிகாரசபையினால் அல்லது விடயத்துக்கேற்றாற்போல வேறு ஏதேனும் அரச பகிரங்கக் கூட்டுத்தாபனத்தால் செய்துகொள் ளப்பட்ட வேண்டுகோளின் மீதும் அத்துடன் சொந்தக்காரர் அல்லது சொந்தக்காரர்கள் அல்லது முகாமைக் கூட்டுத்தாபனம் கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் கூட்டாட்சிச் சிறுகூறுகளின்பொது அம்சங்களை அல்லது பொதுவசதிகளை முறையாகக் கட்டுப்படுத்த, பராமரிக்க, முகாமை செய்ய அத்துடன் நிருவகிக்க இயலாதுள்ளனர் என அதிகாரசபை திருப்திப்படுமிடத்து, கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் அத்தகைய பொது அம்சங்களையும் பொது வசதிகளையும் முகாமைக் கூட்டுத்தாபனம் கட்டுப்படுத்தி, பராமரித்து முகாமைசெய்து, நிருவகித்து வரக்கூடியதாகவுள்ள அத்தகைய காலம்வரை, அத்தகைய பொது அம்சங்களினதும் பொதுவசதிகளினதும் கட்டுப்பாட்டையும் பராமரிப்பையும் முகாமையையும் நிருவாகத்தை யும் மேற்கொள்ளலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டுப் பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

"முகாமைச் சபை.

8. (1) அதிகாரசபை அலுவல்களின் முகாமை யும் நிருவாகமும் (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைச்

சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். அது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர் —

(i) 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பொதுமுகாமையாளர் :

(ii) தேசிய அரசுப் பேரவையினது 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி :

(iii) 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை பொதுப் பயன் பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழுவின் பணிப்பாளர் தலைமை யதிபதி :

(iv) தேசிய அரசுப் பேரவையினது 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர்வழங்கல் மற்றும் வடி காலமைப்புச் சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகால மைப்புச் சபை யின் பொது முகாமையாளர் :

(v) முறையே கொழும்பு, கோட்டே, தெஹிவளை மவுன்ட் லவினியா மற்றும் மொறட்டுவ மாநகர சபை களின் மாநகர ஆணையாளர்கள் ;

(vi) 17 ஆம் பிரிவின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட அதிகாரசபையின் பொது முகாமையாளர் சபையின் செயலாளராக இருத்தல் வேண்டும் :

(ஆ) (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பின்வரும் முறையில், அமைச்சரினால் நியமிக்கப்படவுள்ள, ஆறுபேர்:—

(i) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரின் பிரதிநிதி ஒருவர் ;

(ii) மனை ஈட்டுப்பணம் கடன் கொடுப்போர் கழகத்தின் பிரதிநிதி ஒருவர் ;

(iii) தனியார்துறை வீடமைப்பு அபிவிருத்தியாளர் கழகத்தின் பிரதிநிதி ஒருவர் ;

(iv) முகாமைக் கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதி ஒருவர் ;

(v) இலங்கை வர்த்தக மன்றத்தின் பிரதிநிதி ஒருவர் ;

(vi) கூட்டாட்சி ஆதன முகாமைத் துறையில் அனுபவத்தைக் கொண்டுள்ள ஆள் ஒருவர், இவர் தவிசாளராக இருத்தல் வேண்டும்.

(2) ஆள் ஒருவர் –

(அ) பாராளுமன்றத்தின் அல்லது மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபையின் உறுப்பினராக இருந்தால் அல்லது வந்தால் ;

(ஆ) இலங்கைப் பிரசையாக இல்லாவிட்டால் அல்லது இல்லாதொழிந்தால் ;

அவர் சபையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருந்து வருவதற்குத் தகுதியற்றவராதல் வேண்டும்.

(3) நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள், (5), (7) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, மூன்றாண்டுக் காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன் மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

(4) அமைச்சர், தவிசாளரை அல்லது எவரேனும் உறுப்பினரை :—

(அ) இரண்டாமுட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட தகைமையீனங்களுள் எதற்கும் அவர் அமைந்தவராக வந்தால் ;

(ஆ) உடல் இயலாமை அல்லது சித்த சுவாதீனமின்மை காரணமாக தமது கடமைகளைப் புரிய இயலாதவராக அவர் வந்தால் ; அல்லது

(இ) அமைச்சரின் அபிப்பிராயப்படி, அதிகாரசபையை அபகீர்த்திக்கு உட்படுத்தக்கூடிய ஏதேனும் செயலை அல்லது விடயத்தை அவர் செய்தால்,

பதவியிலிருந்து விலக்கலாம்.

(5) சபையின் தவிசாளர் அல்லது வேறு எவரேனும் உறுப்பினர் பதவியை வறிதாக்குகின்ற பட்சத்தில், அமைச்சர், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துப் பின்னுறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகிப்பதற்கென வேறோர் ஆளை நியமிக்கலாம்.

(6) சபையின் தவிசாளர் அல்லது எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காகத், தமது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாகப் புரியமுடியாதவராயின், அமைச்சர், தவிசாளராக அல்லது உறுப்பினராக அவரது இடத்தில் வேறோர் ஆளை நியமிக்கலாம்.

(7) சபையின் எவரேனும் உறுப்பினர் எந்நேரத்திலும், அமைச்சருக்கு முகவரியிட்ட எழுத்திலான கடிதத் தெரிவிப்பின் மூலம் தமது பதவியிலிருந்து விலகலாம். அத்தகைய பதவி விலகலானது, அமைச்சரினால் அது ஏற்றுக் கொள்ளப்பட்ட தேதியிலிருந்து பயனுடையதாகவருதல் வேண்டும்.

(8) சபை உறுப்பினர்கள், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

(9) சபையின் தவிசாளர், சமுகமாயிருந்தால், சபையின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமை தாங்குதல் வேண்டும் : ஏதேனும் அத்தகைய கூட்டத்துக்குத் தவிசாளர் வருகைதராதபோது, சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள் உறுப்பினர்களுள் ஒருவரை அக்கூட்டத்தில் தலைமை தாங்கவெனத் தெரிவு செய்தல் வேண்டும்.

(10) பதவி வழி உறுப்பினர் எவரும், எந்நேரத்திலும், எழுத்திலான முன்னறிவித்தல் மூலம், தவிர்க்கமுடியாத சந்தர்ப்ப சூழ்நிலைகள் காரணமாக சபையின் கூட்டத்துக்குச் சமுகமளிக்க இயலாதவராயின், கொடுக்கப்பட்ட ஒரு தேதியன்று நடாத்தப்படும் கூட்டத்தில் தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கெனத் தமது பிரதியாளரைப் பெயர்குறித்து நியமிக்கலாம்.

(11) சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும் ; அத்துடன் சபை அத்தகைய சபையின் கூட்டங்கள் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களில் அலுவலைக் கொண்டு நடாத்துதல் தொடர்பிலுமான நடைமுறையை ஒழுங்குப்படுத்தலாம்.

(12) சபையானது, இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதிலும் பணிகளை நிறைவேற்றுகையிலும் அல்லது கடமைகளைப் புரிகையிலும், அமைச்சரினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(13) சபையினால் கொண்டுநடாத்தப்படும் அல்லது கொண்டு நடாத்தப்பட உத்தேசிக்கப்படும் ஏதேனும் அலுவலில் நேரடியாகவோ அல்லது நேரடியற்றவிதமாகவோ அக்கறை கொண்டுள்ள சபையின் உறுப்பினர் ஒருவர், அத்தகைய அலுவல் கலந்துரையாடப்படும் சபையின் கூட்டத்தில் அத்தகைய அக்கறையின் தன்மையை வெளிவிடுதல் வேண்டும். அவ்வெளிவிடுகையானது சபையின் கூட்டக் குறிப்புகளில் பதியப்படல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய உறுப்பினர், அத்தகைய அலுவல் தொடர்பாக சபையின் ஏதேனும் கலந்தாராய்வில் அல்லது முடிவில் பங்குபற்றுதல் ஆகாது ; அத்துடன் அத்தகைய கலந்தாராய்வு இடம்பெற்றுக்கொண்டிருக்கும்போது அல்லது, அத்தகைய முடிவுசெய்யப்படும்போது அத்தகைய கூட்டத்திலிருந்து வெளியேறுதல் வேண்டும்.

(14) சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினரிடையே வெற்றிடமொன்று இருந்தமை காரணமாக அல்லது உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருந்தமை காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாதல் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டுப் பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

"முகாமைக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் பற்றி விசாரணை செய்தல்.

9. (1) அதிகாரசபை, அதன் சொந்தப் பிரேரணை மீது அல்லது முகாமைக் கூட்டுத்தாபன உறுப்பினர்களின் பெரும்பான்மையினரது அல்லது கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் சொந்தக்காரர்களுள் மூன்றிலொன்றுக்குக் குறையாதவர்களினது விண்ணப்பத்தின் மீது முகாமைக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் பற்றியும் நிதிசார் ஸ்திரப்பாடு பற்றியும் விசாரணையொன்றை நடாத்தலாம் அல்லது விசாரணையை நடாத்துவதற்கு அதன் சார்பில் எழுத்திலான கட்டளை மூலம் அதிகாரசபையினால் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் ஆளைப் பணிக்கலாம்.

(2) ஒராமுட்பிரிவின் கீழ் விசாரணையொன்றை நடாத்தும் நோக்கங்களுக்காக, அதிகாரசபை அல்லது விசாரணையை நடாத்துவதற்கென அதனால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் பின்வருவனவற்றைச் செய்வதற்குத் தத்துவம் கொண்டவராதல் வேண்டும் :—

(அ) முகாமைக் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினரை அல்லது கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் சொந்தக்காரர் அல்லது சொந்தக்காரர்களைக் கட்டளை விட்டழைப்பதற்கு ;

(ஆ) முகாமைக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் தொடர்பிலான ஏதேனும் புத்தகத்தை அல்லது ஆவணத்தைக் காண்பிக்குமாறு அல்லது ஏதேனும் காசை அல்லது பிணைப்பொறுப்பை தேவைப்படுத்துவதற்கு ;

(இ) கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் சொந்தக்காரர்களின் விசேட பொதுக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு ;

(ஈ) முகாமைக் கூட்டுத்தாபனத்தின் உடைமையிலுள்ள கணக்குப் புத்தகங்களை அல்லது ஆவணங்களை அவரது காப்பில் எடுப்பதற்கு.

(3) ஓராமுட்பிரிவின் கீழ் விசாரணையொன்று நடாத்தப்படுமிடத்து, அதிகாரசபை அல்லது விசாரணை நடாத்த அதிகார சபையால் அதிகாரமளிக்கப்பட்ட ஆள், முறையான விசாரணையின் பின்னர் முகாமைக் கூட்டுத்தாபனம் தொடர்பாக கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும் என்பதுடன் அக்கட்டளையை கூட்டாட்சி ஆதன அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனக் கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் சொந்தக்காரர்கள் அனைவருக்கும் தெரிவித்தலும் வேண்டும்.

(4) மூன்றாமுட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்கு இணங்கியொழுகுதல் முகாமைக் கூட்டுத்தாபனத்தின் கடமையாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9அ, 9ஆ, 9இ மற்றும் 9ஈ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

10. பின்வரும் புதிய பிரிவுகள் முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவை நேரேயுடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை அச் சட்டவாக்கத்தின் 9அ, 9ஆ, 9இ மற்றும் 9ஈ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"அதிகாரமளிக்கப்படாத கட்டிட நிர்மாணங்களை இடித்தகற்றுதல்.

9அ. (1) ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத கூட்டாட்சி ஆதனத்தில் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தில் அதிகாரமளிக்கப்படாத கட்டிட நிர்மாணமொன்று கட்டியமைக்கப்பட்டுள்ளது அல்லது கட்டியமைக்கப்பட்டு வருகின்றது என முறைப்பாடொன்றை அதிகாரசபை பெறுகின்றவிடத்து அல்லது தகவலைப் பெறுகின்றவிடத்து, அதிகாரசபை, கூட்டாட்சியாதனச் சிறுகூறில் அல்லது பொது அம்சத்தில் அத்தகைய அதிகாரமளிக்கப்படாத

கட்டிட நிர்மாணத்தைக் கட்டியமைக்கின்ற அல்லது கட்டியமைத்துள்ள கூட்டாட்சியாதனச் சிறுகூறின் சொந்தக்காரர் மீது எழுத்திலான அறிவித்தல் ஒன்றையும் அத்தகைய கூட்டாட்சியாதனச் சிறுகூறின் ஒவ்வொரு இருப்பாட்சியாளர் மீதும், முகாமைக் கூட்டுத்தாபனம், ஏதேனும் இருப்பின், அதற்கும் அந்த அறிவித்தலின் பிரதி ஒவ்வொன்றையும் சேர்ப்பித்து, விடயத்துக்கேற்றாற்போல அந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்படும் ஒரு தேதியிலும் நேரத்திலும் இடத்திலும் விசாரணையொன்றுக்குச் சமூகமளித்து —

(அ) அக்கட்டிட நிர்மாணத்தை அத்தகைய ஆள் தொடர்வதிலிருந்து அதிகாரசபையினால் ஏன் தடுக்கப்படலாகாது என்பதற்கு ;

(ஆ) அதிகாரமளிக்கப்படாத கட்டிட நிர்மாணம் இடித்தழிக்கப்பட்டு கூட்டாட்சி ஆதனச் சிறுகூற்றை அதன் மூல நிலைமைக்கு ஏன் கொணரப்படுதலாகாதென்பதற்கு,

காரணம் காட்டுமாறு விடயத்துக்கேற்றாற்போல அத்தகைய சொந்தக்காரரை, இருப்பாட்சியாளரை அல்லது முகாமைக் கூட்டுத்தாபனத்தைப் பணித்தல் வேண்டும்.

(2) ஓராமுட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலைப் பெற்றுக்கொண்டதனைப் பின்பற்றி இடம்பெறும் விசாரணையில் சமூகமாயிருக்கும் ஆட்கள் தம் திறம் கூறுவதற்கு அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அதன்பின்னர், அத்தகைய கட்டிட நிர்மாணம் அதிகாரமளிக்கப்படாத கட்டிட நிர்மாணம் என அதிகாரசபை அபிப்பிராயப்படுகின்றவிடத்து :—

(அ) அத்தகைய அதிகாரமளிக்கப்படாத கட்டிட நிர்மாணத்தை மேற்கொண்டு கட்ட வேண்டாமெனவும் ; அல்லது

(ஆ) கூட்டாட்சியாதனச் சிறுகூறை அல்லது கூட்டாட்சியாதனச் சிறு கூறுடன் சேர்ந்த துணைச் சிறுகூறை அல்லது பொது அம்சத்தை அதன் மூல நிலைமைக்குக் கொண்டுவருமாறு ; அல்லது

(இ) கூட்டாட்சி ஆதனம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனம் எந்த அனுமதிப்பத்திரத்துக்கமைவாக நிர்மாணிக்கப்படுகின்றதோ அந்த அனுமதிப்பத்திரத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகும் நோக்கத்துக்காக அத்தகைய வேறு வழிவகைகளை எடுக்குமாறு,

விடயத்துக்கேற்றாற்போல, அத்தகைய சொந்தக்காரரை அல்லது இருப்பாட்சியாளரை அல்லது முகாமைக் கூட்டுத்தாபனத்தை அல்லது வேறு ஆளைப் பணிக்கலாம்.

(3) விடயத்துக்கேற்றாற்போல, அத்தகைய சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் அல்லது முகாமைக் கூட்டுத்தாபனம் அல்லது வேறு ஆள் —

(அ) விசாரணைக்குச் சமுகமாயிருப்பதற்குத் தவறுகின்றவிடத்து ; அல்லது

(ஆ) அத்தகைய விசாரணையில் சமுகமாயிருந்ததன் பின்னர் (2) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு, அப்பணிப்பை வழங்கிய திகதியிலிருந்து ஏழு நாட்களுக்குள்ளாக, இணங்கியொழுக மறுக்கின்றவிடத்து,

அதிகார சபையானது, —

(i) அத்தகைய அதிகாரமளிக்கப்படாத கட்டிட நிர்மாணத்தை இடித்தழிப்பதற்குத் தேவையான வழிவகைகளை எடுத்தல் வேண்டும் ;

(ii) காணிச் சிறு கூறை அல்லது கட்டிடத்தைத் தொடர்ந்து பயன்படுத்துவதை நிறுத்திக்கொள்ளுமாறு பணித்தல் வேண்டும் ;

(iii) இரண்டாம் பிரிவின் கீழான அத்தகைய பணிப்புரை மூலம் அவ்வாறு செய்யுமாறு சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் அல்லது வேறு ஆள் தேவைப்படுத்தப்பட்ட அத்தகைய வேறு செயல்கள் எல்லாவற்றையும் செய்தல் வேண்டும்.

(4) அதிகாரசபையானது, (3) ஆம் உட்பிரிவின் (i) ஆம், (ii) ஆம் அல்லது (iii) ஆம் பந்திகளின் கீழ் செயலாற்றும் நோக்கத்துக்காக, எந்தக் கூட்டாட்சி ஆதனத்தின் மீது அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் மீது அதிகாரமளிக்கப்படாத கட்டிட நிர்மாணம் கட்டியமைக்கப்படுகின்றதோ அல்லது கட்டியமைக்கப்பட்டுள்ளதோ அந்தக் கூட்டாட்சி ஆதனத்துக்குள் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்துக்குள் நுழைவதற்கும் அந்நோக்கத்துக்கு அவசியமாகக்கூடியவையான அத்தகைய செயல்கள் எல்லாவற்றையும் செய்வதற்கும் எவரேனும் அலுவலருக்கு அதிகாரமளிக்கலாம்.

(5) நாலாம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட எவையேனும் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் செய்யப்பட்ட எச்செயலுக்காகவும் எவரேனும் ஆளுக்கெதிராக எந்த வழக்கும் அல்லது வேறு நடவடிக்கையும் அமைதல் ஆகாது : அத்துடன் அத்தகைய செயலினால் விளைவிக்கப்பட்ட ஏதேனும் சேதத்துக்கான அல்லது நட்டத்துக்கான நட்டஈடு எதற்கும் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் அல்லது ஆள் எவரும் உரித்துடையவராதல் ஆகாது.

(6) மூன்றாமுட்பிரிவின் (i). ஆம் (ii). ஆம் (iii) ஆம் பந்திகளின் கீழ் நடவடிக்கை எடுக்கும் நோக்கத்துக்காக அதிகாரசபைக்கு அவசியமான உதவிகளைச் செய்யுமாறு வேண்டிக்கொள்ளப்படும்போது அவ்வாறு செய்வது பொலிஸ் படை உறுப்பினர் ஒவ்வொருவரதும் கடமையாதல் வேண்டும்.

(7) கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் அதிகாரமளிக்கப்படாத கட்டிட நிர்மாணங்களை அகற்றுவதில் அல்லது இடித்தழிப்பதில் அல்லது (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றி ஏதேனும் வேலையை தொடர்ந்து இடம்பெறாது நிறுத்துவதில் அதிகாரசபையினால் உறப்பட்ட நியாயமான எல்லாச் செலவினங்களையும் அறவிடுவதற்கு அதிகாரசபை உரித்துடையதாதல் வேண்டும்.

(8) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் அத்தகைய சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் அல்லது ஆள் அத்தகைய அறிவித்தலுக்கு இணங்கியொழுகத் தவறியமை காரணமாக அவரால் உறப்படும் ஏதேனும் பொறுப்பைப் பாதித்தல் ஆகாது.

பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரினால் வழங்கப்படும் பொது வசதிகள் தொடர்பான கொள்கைகளை பற்றிய முறைப் பாடுகள்.

9ஆ. (1) கட்டிடத் திட்டத்தை அங்கீகரிப்பதற்குத் தத்துவமளிக்கப்பட்ட அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட, கூட்டாட்சி ஆதனத்தின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரால் அத்தகைய கூட்டாட்சிச் சிறுகூறுக்கு வழங்கப்படும் பொதுவசதிகளின் தராதரம் தொடர்பிலான இசைவுச் சான்றிதழ் இல்லாமல், (117 ஆம் அத்தியாயமான) ஆவணப்பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் காணிகள் பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளப்பட்ட கூட்டாட்சி ஆதனத்தின் கூட்டாட்சிச் சிறு கூறின் கொள்வனைகாரரால் செய்யப்பட்ட எழுத்திலான முறைப்பாட்டின் மீது, அதிகாரசபையானது, முறையான விசாரணை

யின் பின்னர் திருப்திப்பட்டதன் மேல், அதிகார சபை ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் தேவைப் படும் பொதுவசதிகளை கட்டளையில் குறித்து ரைக்கப்படும் காலப்பகுதிக்குள்ளாக, அவரது செலவில் வழங்குமாறு பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரைப் பணிக்கும் கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

(2) ஓராமுட்பிரிவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட எந்தச் சொந்தக்காரருக்கு எதிராகக் கட்டளை யொன்று ஆக்கப்பட்டுள்ளதோ அந்தச் சொந்தக் காரர் அத்தகைய கட்டளைக்கு இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, அதிகாரசபை, கூட்டாட்சி ஆதனத்தின் கூட்டாட்சிச் சிறு கூறின் கொள்வனை காரருக்கு அத்தகைய சேவைகளை வழங்கி, சொல்லப்பட்ட பதிவுசெய்யப்பட்ட சொந்தக்கார ரிடமிருந்து அதிகாரசபைக்குப் போகுமதியான கடன் ஒன்றென்றாற்போன்று, தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுள்ள ஏதேனும் நீதிமன்றத்திலான வழக்கொன்றில் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்கார ரிடமிருந்து அத்தகைய செலவினங்களை அறவிடுதல் வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட தற்போதைக் கான கூட்டாட்சி யாதன வரைபடத்தில் காட்டப்பட்ட கட்டிட நிர்மாணத்தின் முன்னேற்றத் தைக் கண்காணித்தல்.

9இ. (1) தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடம், 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் கீழ், காணிகள் பதிவாளருடன் பதிவுசெய்யப் பட்டதன்மேல், தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனத்தின் சொந்தக்காரர், சொல்லப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத் துடன் சேர்த்துக் கோப்பிடப்பட்ட கருத்திட்ட நடைமுறைப்படுத்தல் திட்டத்தின்படி, பதிவு செய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட, நிர்மாணிக்கப்பட வுள்ள கட்டிட நிர்மாணத்தின் முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டும் காலாண்டு அறிக்கைகளை, பதிவாளருக்கு ஒரு பிரதி, பொதுமுகாமையாள ருக்கு ஒரு பிரதி அத்துடன் ஈடுபெற்றவர் எவரேனும் இருந்தால் அவருக்கு ஒரு பிரதி என முப்பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண் டும்.

(2) காலாண்டுதோறும் சமர்ப்பிக்கப்படவுள்ள முன்னேற்ற அறிக்கை அட்டவணையில்தரப்பட்டுள்ள படிவத்தின் படி சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) சொந்தக்காரர் தற்போதைக்கான கூட்டாட்சி யாதன வரைபடத்துடன் கோப்பிடப்பட்ட கருத்திட்ட நடைமுறைப்படுத்தல் திட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனத்தின் கட்டிட நிர்மாணத்தைத் திருப்தி கரமாக நிறைவேற்றவில்லை எனப் பொது முகாமையாளர் திருப்திப்பட்டவிடத்தும், தற்போதைக்கான கூட்டாட்சி வரைபடத்தில் காட்டப்பட்டதும் பதிவாளரிடம் பதிவுசெய்யப்பட்டதுமான உத்தேச கட்டிடம் கட்டப்படவுள்ள காணிச் சிறு கூறை ஈட்டின் கீழ் பிணைப் பொறுப்பாக்கிக் கொண்ட சொந்தக்காரரிடம் ஏற்கனவே நிதிகளை வழங்கியுள்ள அல்லது விற்பனைக்கான உடன்படிக்கைகளின் கீழும் பதிவாளரிடம் பதிவு செய்து கொண்டதுமான தற்போதைக்கான சிறு கூறைக் கொள்வனவு செய்வதற்கு உடன்பட்டு சொந்தக் காரர்களுக்கு முற்பணங்களாக நிதி வசதிகளை ஏற்கனவே வழங்கியுள்ள, ஈடுபெற்றவர்களின் அல்லது பதிவுசெய்யப்பட்ட உத்தேச கொள்வனை காரர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக அதிகாரசபையின் தலையீடு அவசியமானதெனப் பொது முகாமையாளர் அபிப்பிராயப்படுகின்ற விடத்தும், முறையாக அறிவிக்கப்பட்ட சொந்தக்காரரின், அத்தகைய ஈடுபெற்றவர்கள், எவரேனும் இருப்பின், அவர்களின் அத்துடன் அத்தகைய உத்தேச கொள்வனைகாரர்கள், எவரேனும் இருப்பின், அவர்களின் கூட்டத்தைக் கூட்டி, சொந்தக்காரர் அத்தகைய கட்டிட நிர்மாணத்தைத் திருப்திகரமாகக் கொண்டு நடாத்துவதற்கு அவரைத் தடுக்கும் விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுதல் வேண்டும்.

(4) சொந்தக்காரர் அத்தகைய கூட்டத்தில் பங்கு பற்றத் தவறினால் அல்லது அதில் பங்குபற்றி ஆனால் அத்தகைய தாமதத்துக்குத் திருப்திகர மான விளக்கமளிக்கத் தவறினால் அல்லது காணிச் சிறு கூறையும் தனிப்பட்ட கூட்டாட்சிச் சிறு கூறையும் பிணைப்பொறுப்பாக்கும் இருந்து வரும் ஈடுகள் அனைத்தும் மீட்கப்படக்கூடியவித மாகவும் பதிவுசெய்யப்பட்ட உத்தேச கொள்வனை காரர்களின் எல்லா ஈடுபாடுகளும் கொடுத்துத் தீர்க்கப்படக்கூடியவிதமாகவும், பகுதியளவில் கட்டிமுடிக்கப்பட்ட கட்டிடத்தின் மட்டம் வரை உத்தேச கட்டிட நிர்மாணத்தின் திருப்திகரமான வேலை நிகழ்ச்சித் திட்டத்தைக் கொடுக்கத் தவறினால், அதிகாரசபையானது —

(அ) ஈடுபெற்றவர்களை ஈட்டுச்சாதனங்களின் படி நடவடிக்கை எடுக்குமாறும் ஈடுபெற்றவருக்கு வருமதியான பணங்களை அறவிடுமாறும், காணிச் சிறு கூறை விற்பனை செய்ததன் பின்னர் ஈடுபெற்றவரிடம் மேன் மிகைப் பணம் எதுவும் மிகுதியாக இருந்தால், பதிவுசெய்யப்பட்ட உத்தேச கொள்வனைகாரர்களின் பணக் கோரிக்கைகளைக் கொடுத்துத்தீர்க்குமாறும் விதந்துரைக்கலாம் ; அல்லது

(ஆ) பதிவுசெய்யப்பட்ட ஈடுபெற்றவர்களுக்கு அல்லது பதிவுசெய்யப்பட்ட உத்தேச கொள்வனைகாரர்களுக்குப் போகுமதியான பணங்களைக் கொடுத்துத் தீர்ப்பதற்காக, தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனம் நிர்மாணிக்கப்படவுள்ள அத்தகைய காணிச் சிறுகூறை அதிகார சபைக்கு உரித்தாக்குமாறு அமைச்சருக்கு விதந்துரைக்கலாம்.

துவணைதுவறிய சொந்தக்காரரின் காணிச் சிறு கூறை உரித்தாக்குதல்.

9ஈ. இச்சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாகவுள்ளது எது எப்படியிருப்பினும்,—

(அ) அமைச்சர், அதிகாரசபையினால் செய்யப்பட்ட விதப்புரையின் மீது அல்லது ஈடுபெற்றவரின் வேண்டுகோளின் மீது, முறையான விசாரணையின் பின்னர் திருப்திப்பட்டதன் மேல், பதிவுசெய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்தின்படி கட்டிட நிர்மாணத்தைக் கொண்டு நடாத்துமாறு சொந்தக்காரரைப் பணிக்கும் கட்டளை ஒன்றை ஆக்குதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய கட்டிட நிர்மாணத்தைக் கொண்டுநடாத்துமாறு பதிவுசெய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனச் சொந்தக்காரரைப் பணிக்கின்ற, (அ) என்னும் பந்தியின் கீழான கட்டளையொன்றை அமைச்சர் ஆக்குகின்றவிடத்து, அமைச்சர், அத்தகைய கட்டளையில் —

(i) பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனம் எனக் கருதப்படுவதற்கு நிர்மாணிக்கப்பட வேண்டிய, பதிவுசெய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சி ஆதன வரைபடத்தில் உள்ள தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனச் சிறு கூறுகளின் தொகையையும் ;

(ii) அத்தகைய கட்டிட நிர்மாணம் கட்டி முடிக்கப்பட அவசியமான காலப் பகுதியையும் ;

(iii) பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் பதிவாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதியையும்,

குறித்துரைத்தல் வேண்டும்.

(இ) எந்தத் தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனந் தொடர்பாக (அ) என்னும் பந்தியின் கீழ் கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அந்த தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனம் எதனதும் சொந்தக்காரர் அக் கட்டளைக்கு இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, (இவர் இதனகத்துப் பின்னர் "தவணைதவறிய சொந்தக்காரர்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவார்) அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், பதிவுசெய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட அத்தகைய காணிச் சிறு கூறை அதிகார சபைக்கு உரித்தாக்கலாம்.

(ஈ) தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனத்தின் காணிச் சிறு கூறு (இ) என்னும் பந்தியின் கீழ் அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ளவிடத்து, சொல்லப்பட்ட காணிச் சிறு கூறின் தவணைதவறிய சொந்தக்காரர் தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடம் பதிவுசெய்யப்பட்ட தேதியன்றுள்ளவாறாக பிரதான விலைமதிப்பீட்டாளரின் பெறுமானமதிப்பீட்டின் அடிப்படையின் மீது அது தொடர்பாக நட்டஈட்டுக்கு உரித்துடையவராதல் வேண்டும். அத்துடன் தவணை தவறிய சொந்தக்காரரின் பின்வரும் கொடுக்குமதிகளுக்கெதிராக எதிரீடு செய்யப்படுதல் வேண்டும் :—

(i) கொள்ளப்பட்ட ஆதனத்தினது ஈட்டிலிருந்து அல்லது ஈடுகளிலிருந்து எழும் வெளி நிலுவையாகவுள்ள கொடுக்குமதிகள் ;

(ii) தற்போதைக்கான கூட்டாட்சிச் சிறுகூறுகளின் விற்பனைக்கான உடன்படிக்கைகளிலிருந்து எழும் வெளிநிலுவையாகவுள்ள கொடுக்குமதிகள் ;

(iii) பதிவுசெய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனந் தொடர்பில் அரசாங்க முகவர் நிலையங்களுள் எதற்குமான வெளிநிலுவையாகவுள்ள கொடுக்குமதிகள்,

(உ) மேலே கூறப்பட்ட திறத்தவர்களுள் எவருக்கும் கொடுத்துத் தீர்க்கப்படாது ஏதேனும் பணத்தொகை எஞ்சியிருந்தால் இயைபான தவணைதவறிய சொந்தக்காரரிடமிருந்து போகுமதியான கடனொன்றென்றாற்போன்று, தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுள்ள நீதிமன்றத்திலான வழக்கொன்றின்வாயிலாக அதிகாரசபையினால் அறவிடப்படுதல் வேண்டும்.".

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டுப் பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"காணிகொள்ளுதற் சட்டத்தின் கீழ் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல்.

10. (1) ஏதேனும் அசைவற்ற ஆதனம் அதிகாரசபையின் ஏதேனும் குறிப்பிட்ட நோக்கத்துக்குக் கொள்ளப்படத் தேவைப்படுத்தப்பட்டவிடத்தும் அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அந்நோக்கத்துக்காக உத்தேச கொள்ளலை அங்கீகரிக்கின்றவிடத்தும், அவ்வாதனம் பகிரங்க நோக்கமொன்றுக்குத் தேவைப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க காணிகொள்ளுதற் சட்டத்தின் கீழ் கொள்ளப்பட்டு அதிகாரசபைக்கு கைமாற்றப்படலாம்.

(2) அதிகாரசபைக்காக (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுவதற்காகக் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகை அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 10அ, 10ஆ மற்றும் 10இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்தல்.

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவை நேரே உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் இடப்படுகின்றன என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 10அ, 10ஆ மற்றும் 10இ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்

"அசைவுள்ள மற்றும் அசைவற்ற அரச ஆதனம் அதிகார சபைக்குக் கிடைக்கக்கூடியதாகச் செய்தல்.

10அ. (1) அதிகாரசபையின் ஏதேனும் நோக்கத்துக்காக அரசின் அசைவற்ற ஆதனம் எதுவும் தேவைப்படுகின்றவிடத்து, அத்தகைய நோக்கம், முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய ஆதனத்தின் விசேட மானியம் அல்லது குத்தகை வழங்கப்படக் கூடிய ஒரு நோக்கமாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதிகாரசபைக்கு அக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய ஆதனத்தின் விசேட மானியத்துக்கு அல்லது குத்தகைக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) அதிகாரசபையின் ஏதேனும் நோக்கத்துக்காக அரசின் அசைவுள்ள ஆதனம் எதுவும் தேவைப்படுகின்றவிடத்து, அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய அசைவுள்ள ஆதனத்தை அதிகாரசபைக்குக் கைமாற்றி அத்தகைய அசைவுள்ள ஆதனத்தின் உடைமையையும் பயன்பாட்டையும் அதிகாரசபைக்கு உரித்தாக்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும், அரசின் அசைவுள்ள ஆதனம் எதனையும் பாதிக்கின்ற கட்டளை எதுவும், அத்தகைய ஆதனத்தின் மீது கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள அமைச்சரின் ஒருப்பாடில்லாமல், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ், அமைச்சரினால் ஆக்கப்படுதல் ஆகாது.

(3) ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தின் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் அசைவுள்ள ஏதேனும் ஆதனத்தைப் பாதிக்கின்ற

கட்டளை எதுவும், அத் திணைக்களம் அல்லது பகிரங்க கூட்டுத்தாபனம் குறித்தொதுக்கப்பட்டுள்ளவரான அமைச்சரின் சம்மதமில்லாமல், (2) ஆம் உட்பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்படுதலாகாது.

கூட்டாட்சி ஆதனத்தை கூட்டாட்சி ஆதன அபிவிருத்திக் கருத்திட்டத்துக்காகக் கொள்ளுதல்.

10ஆ. (1) இச்சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாகவுள்ளது எது எப்படியிருப்பினும், அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம், பின்வரும் விடயங்களுள் எதிலேனும் குறிப்பீடுசெய்யப்பட்ட கூட்டாட்சி ஆதனங்களுள் எதிலும் அல்லது கூட்டாட்சியாதனச் சிறு கூறின் ஏதேனும் பாகத்தில் அல்லது கூட்டாட்சியாதனச் சிறு கூறுகளுள் எதிலும், கூட்டாட்சி ஆதன மீள் அபிவிருத்திக் கருத்திட்டம் எதனையும் கொண்டு நடாத்தும் நோக்கங்களுக்காகக் கொள்ளுதல் அவசியமானதென வெளிப்படுத்தலாம் :—

(அ) கூட்டாட்சியாதன வரைபடமொன்றில் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடமொன்றில் காட்டப்பட்ட ஏதேனும் துணைப் பிரிவாக்கப்பட்ட கட்டிடம், 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் 20ட என்னும் பிரிவுக்கிணங்க, கூட்டாட்சியாதனச் சிறு கூறுச் சொந்தக்காரர்களின் தீர்மானம்மூலம், அழிக்கப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டவிடத்து ; அல்லது

(ஆ) கூட்டாட்சியாதன வரைபடமொன்றில் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடமொன்றில் காட்டப்பட்ட ஏதேனும் துணைப் பிரிவாக்கப்பட்டதான கட்டிடமொன்று சேதப்படுத்தப்பட்டு, ஆனால் முற்றாக அழிக்கப்படாதவிடத்தும் முகாமைக் கூட்டுத்தாபனம் அல்லது

சொந்தக்காரர்கள், 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் 20ஓ என்னும் பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறாக துணைப் பிரிவாக்கப்பட்ட கட்டிடத்தின் சேதப்படுத்தப்பட்ட பாகத்தினை மீளக் கட்டியமைக்க அசிரத்தையாக இருந்துள்ளவிடத்து அல்லது தவறியுள்ளவிடத்தும் ; அல்லது

(இ) ஏதேனும் துணைப் பிரிவாக்கப்பட்ட கட்டிடமொன்று கூட்டாட்சியாதன வரைபடமொன்றில் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடமொன்றில் காட்டப்பட்டுள்ளவிடத்தும் வெளிப்படுத்துகைக்கு ஆகக்குறைந்தது நாற்பது ஆண்டுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டுள்ளவிடத்தும் ;

(ஈ) கூட்டாட்சியாதன வரைபடமொன்றில் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடமொன்றில் காட்டப்பட்ட ஏதேனும் துணைப் பிரிவாக்கப்பட்ட கட்டிடமொன்றினதும் அதன் பொது அம்சங்களினதும் பராமரிப்பு, கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் சொந்தக்காரர்களுள் பெரும்பான்மையினரால் அல்லது முகாமைக் கூட்டுத்தாபனத்தினால் கைவிடப்பட்டு அண்டை அயற்புறத்துக்கு அதன் மூலம் தொல்லையை விளைவிக்கின்றவிடத்து அல்லது அவ்விடப் பரப்பின் சூழலுக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றவிடத்து,

(2) ஒராமுட்பிரிவின் கீழான அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்பட்டவிடத்து, அத்தகைய அறிவித்தல் எந்தக் கூட்டாட்சி ஆதனம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனம் தொடர்பிலானதோ அந்தக் கூட்டாட்சி ஆதனம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனம், காணி கொள்ளுதற் சட்டத்தின் நோக்கங்களுக்காக, பகிரங்க நோக்கமொன்றுக்குத் தேவைப்படும் காணியொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் கீழ் கொள்ளவும்படலாம்.

[illegible]

10இ. (1) அதிகாரசபையானது, அமைச்சரின் அங்கீகாரத்துடன், விற்பனை, குத்தகை வாடகை அல்லது வாடகைக் கொள்வனவு என்பன வகையாக, அதிகாரசபையினால் வைத்திருக்கப் படும் ஏதேனும் காணி, தொடர்மாடி, வீடு அல்லது வேறு வாழ்இடவசதி என்பவற்றை, அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய கையுதிர்ப்புச் சாதனத்தில் குறித்துரைக் கப்படும் அத்தகைய நியதி, நிபந்தனை களுக்கமைவாகவும் அத்துடன் குறிப்பாக, ஆனால் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றி, அத்தகைய சாதனத்தில் குறித்துரைக்கப்பட்ட வேறு ஏதேனும் நிபந் தனைக்கு இணங்கியொழுகத் தவறும் பட்சத்தில் அல்லது அத்தகைய சாதனத்தின் கீழ் அதிகார சபைக்குப் போகுமதியான ஏதேனும் பணம் அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான ஏதேனும் அத்தகைய காலப்பகுதிக்கு செலுத்தப் படாதெஞ்சியிருக்கும் பட்சத்தில், அத்தகைய சாதனத்தினால் பயனுறுத்தப்பட்ட கையுதிர்ப்பு நீக்கஞ்செய்யப்படலாம் அல்லது முடிவுறுத்தப் படலாம் என்ற நிபந்தனைக்கமைவாகவும், கையுதிர்க்கலாம்.

(2) முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத் திலுள்ளதெதுவும் அதிகாரசபையின் நோக்கங் களுள் எதற்காகவேனும் அதிகாரசபையின் ஏதேனும் அரச காணி கையுதிர்க்கப்படுவதனைப் பாதித்தல் அல்லது பாதிப்பதாகக் கருதப்படுதல் அல்லது கொள்ளப்படுதல் ஆகாது.".

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டுப் பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

[illegible]

15. சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட ஆளிட மிருந்து அதிகாரசபைக்கு பணத்தொகையொன்று வருமதியுடையதாக இருக்கின்றதெனப் பயன்படும்

பொதுமுகாமையாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்று, அது பொதுமுகாமையாளரினால் அல்லது அதற்கென அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒருவரினால் கையொப்பமிடப்பட்டதாக அது கொள்ளப் பட்டால், அதன்கண் கூறப்பட்ட நிகழ்வுகளின் முகத்தோற்றவளவிலான எண்பிப்பாதல் வேண்டும் என்பதுடன் பொதுமுகாமையாளரின் அல்லது அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் கையொப்பம் பற்றிய எண்பிப்பில்லாது சான்றாக ஏற்றுக்கொள்ளப்படற்பாலதாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 15அ, 15ஆ மற்றும் 15இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**14.** பின்வரும் புதிய பிரிவுகள் முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவை நேரே உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை அச்சட்டவாக்கத்தின் 15அ, 15ஆ அத்துடன் 15இ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"அதிகாரசபைக்கு வருமதியான பணங்களை அறவிடுதல்.

15அ. (1) எவரேனும் ஆள் வதிகின்ற அல்லது அவ்வாளுக்குச் சொந்தமான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனம் அமைந்துள்ள மாவட்டத்தின் மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள மாவட்ட நீதிமன்றத்தின் முன்னர், குறித்துரைக்கப்பட்ட ஒரு தேதியில் அவ்வாளிடமிருந்து பணத்தொகையொன்று அதிகாரசபைக்கு வருமதியானதெனக் கூறும் பொதுமுகாமையாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் காண்பித்ததன்மேல், அத்தகைய ஆதனம் வைத்திருக்கப்பட்டுள்ள இடத்திலிருந்து அத்தகைய ஆதனத்தை அகற்றுவதிலிருந்து அத்தகைய ஆதனத்தை அத்தகைய இடத்திலிருந்து அகற்றச் செய்வதிலிருந்து அல்லது அகற்ற அனுமதிப்பதிலிருந்து அத்தகைய ஆளைத் தடுக்கும் தடைக் கட்டளையொன்றை நீதிமன்றம் வழங்குதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பணத் தொகையை அறவிடுவதற்கு அவசியமாகக் கூடியவாறாக அத்தகைய ஆளின் அசைவுள்ள

மற்றும் அசைவற்ற ஆதனத்துள் எதனையும் அல்லது அதன் அத்தகைய பாகத்தைக் கைப்பற்றி விற்குமாறு பிசுக்காலுக்கு அதிகாரமளித்து அவரைத் தேவைப்படுத்தும் நிறைவேற்றுத் தாணையொன்றை பிசுக்காலுக்கு வழங்குமாறு பணித்தலும் வேண்டும் : அத்துடன் அத்தகைய கைப்பற்றுகைக்கும் விற்பனைக்கும் (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 226 முதல் 297 வரையான (இரண்டுமுட்பட்ட) பிரிவுகளின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) ஓராமுட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட சான்றிதழொன்றைப் பொதுமுகாமையாளர் வழங்குகின்றவிடத்து, அதே நேரத்தில் அது பற்றிய அறிவித்தல் ஒன்றை, சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட ஆளுக்கு நேரடியாகச் சேர்ப்பிப்பதன் மூலம், பதிவுத் தபால் மூலம் அல்லது தந்தி மூலம் வழங்குதல் வேண்டும் ; ஆனால் அத்தகைய ஆளினால் அத்தகைய அறிவித்தல் பெற்றுக்கொள்ளப்படவில்லை என்பது இப்பிரிவின் கீழான நடவடிக்கைகளைச் செல்லுபடியற்றதாக்காது.

ஆள் ஒருவரினால் செலுத்தப்பட வேண்டிய பணத் தொகைகளை அத்தகைய ஆளின் ஊதியத்திலிருந்து அறவிடுதல்.

15ஆ. (1) அதிகாரசபைக்கு இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் பணத்தொகையைச் செலுத்த வேண்டியவரான எவரேனும் ஆள், இலங்கை அரசாங்கத்தின் அல்லது உள்ளூராட்சிச் சேவையின், நீதிச் சேவையின் ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவின் ஊழியர் ஒருவராக இருந்தால், ஊழியத்தின் மூலம் கிடைக்கும் அத்தகைய ஊதியத்திலிருந்து ஏதேனும் அத்தகைய பணத்தொகை அறவிடப்படுவதற்கு அல்லது கழிக்கப்படுவதற்கு ஆளானவராதல் வேண்டும்.

(2) பொதுமுகாமையாளர், எவரேனும் ஆளின் விடயத்தில் (1) ஆம் உட்பிரிவின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட அளவீட்டு முறை திருப்திகரமான அறவீட்டு முறையென அபிப்பிராயப்படு வாராயின், பணிப்பில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய கால இடைவெளிகளிலும் அவ்வாளுக்குக் கொடுபடற்பாலதான ஊதியத்திலிருந்து அத்தகைய பணத்தொகையைக் கழித்து அதிகார சபைக்குச் செலுத்துமாறு அத்தகைய ஆளின் தொழில்தருநருக்குப் பணித்தல் வேண்டும்.

(3) இரண்டாமுட்பிரிவின் கீழ் பணிப்பொன்றைப் பெற்றுக்கொள்ளுகின்ற தொழில்தருநர் ஒவ்வொருவரும் உடனடியாக அத்தகைய பணிப்புக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(4) அத்தகைய ஊதியத்தின் மூலமான ஊதியத்திலிருந்து அத்தகைய கழிப்பனவு செய்யப்பட்டவிடத்து, தொழில்தருநர், நியாயமான காலத்துக்குள்ளாக, ஆனால் அறவிடப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குப் பிந்தாமல், எந்த ஆளிடமிருந்து அத்தகைய அறவீடு செய்யப்பட்டதோ அந்த ஆளுக்கு அத்தகைய பணத்தைப் பெற்றுக் கொண்டமையை அல்லது அத்தகைய பெருமதியை அறவீட்டுக் கொண்டமையை ஏற்றுக் கொள்ளும் பற்றுச் சீட்டொன்றை வழங்குதல் வேண்டும் என்பதுடன் அதே காலத்துக்குள்ளாக எந்தப் பொதுமுகாமையாளரிடமிருந்து அத்தகைய பணிப்பை அவர் பெற்றுக்கொண்டாரோ அந்த முகாமையாளருக்கு அந்நிகழ்வு பற்றி அறிவித்தலும் வேண்டும்.

(5) இரண்டாமுட்பிரிவின் கீழான பணிப்பொன்று எந்த ஆள் தொடர்பாக வலுவில் இருக்கின்றதோ அந்த ஆள் எவரும் அவரது

தொழில் தருநரின் ஊழியத்திலிருந்து விலகிச் செல்லவிருந்தால் அல்லது விலகிச் சென்றால், தொழில்தருநர் உடனடியாக —

(அ) அத்தகைய ஆளுக்குக் கொடுக்குமதியான ஊழியம் அத்தகைய பணிப்பின் கீழ் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய பணத்தொகையை விஞ்சுமாயின், அத்தகைய ஊழியத்திலிருந்து, அத்தகைய பணத்தொகையைக் கழித்து, அவ்வாறு கழிக்கப்பட்ட பணத்தொகையை அதிகார சபைக்குச் செலுத்துதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய ஊழியம் அறவிடப்பட வேண்டிய தொகையை விஞ்சாததாயின், அத்தகைய ஊழியத்தொகையை அதிகார சபைக்குச் செலுத்துதல் வேண்டும்.

(6) ஏதேனும் காரணத்துக்காக எவரேனும் ஆளின் தொழில்தருநர் ஒருவர் (2) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புக்கு இணங்கியொழுக முடியாதவிடத்து, அவ்வாறு செய்வதற்கு அவருக்குள்ள இயலாமை பற்றியும் அதற்கான காரணம் பற்றியும் எழுத்தில் உடனடியாகப் பொதுமுகாமையாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

(7) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுள் எதனையும் மீறுகின்ற தொழில்தருநர் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு அல்லது ஓராண்டுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(8) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் ஏதேனும் தவறு ஆட்கள் குழுவொன்றினால் புரியப்பட்டவிடத்து, அப்போது —

(அ) அத்தகைய ஆட்கள் குழு கூட்டிணைக் கப்பட்ட குழுவொன்றாக இருந்தால், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ் வொரு பணிப்பாளரும் அலுவலரும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய ஆட்கள் குழு குழுமமாக இருந்தால், அக்குழுமத்தின் பங்காளர் ஒவ்வொருவரும்,

அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், அத்தகைய பணிப்பாளர், அலுவலர் அல்லது பங்காளர் எவரும், அத்தவறு தமது அறிவில்லாமல் புரியப்பட்டதென அல்லது அத்தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்குத் தம்மாலான விழிப்புக்கவனம் எல்லாவற்றையும் அவர் பிரயோகித்தாரென எண்பிப்பாராயின், அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப் படுதல் ஆகாது.

(9) இப்பிரிவின்கீழான தவறெதற்குமான குற்ற வழக்குத் தொடுப்பு எதுவும், அதிகாரசபை யினால் அல்லது அதன் அனுமதியுடன் தவிர, தொடரப்படுதல் ஆகாது.

(10) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ளது எதுவும், இச்சட்டத்தின் கீழ் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டியதும் அது தொடர்பாகப் பொது முகாமையாளர் (2) ஆம் உட்பிரிவின் கீழ் பணிப்பொன்றைக் கொடுத்துள் ளதுமான ஏதேனும் பணத்தொகையை, வேறு

எம்முறையிலேனும் அல்லது அதன் சார்பில் ஏற்புடைத்தான வேறு ஏதேனும் நடைமுறைமூலம் அறவிடுவதற்கு பொது முகாமையாளருக்குள்ள உரிமைகளை பாதித்தல் அல்லது பாதிப்பதாகக் கருதப்படுதல் அல்லது பொருள் கொள்ளப் படுதல் ஆகாது.

அதிகாரசபையின் சார்பில் பொது முகாமை யாளரினால் ஆவணங்களில் ஒப்பமிடப் படுதல்.

15இ. பொது முகாமையாளர், இச்சட்டத்தின் கீழ் அதிகாரசபையினால் அவருக்குக் குறித் தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையைப் பிரயோகிப்பதில், நிறை வேற்றுவதில் அல்லது புரிவதில் கையொப்பமிட வேண்டும் என அல்லது நிறைவேற்ற வேண்டு மெனத் தேவைப்படுத்தப்பட்ட எல்லா ஆவணங் களிலும் அதிகாரசபையின் சார்பில் கையொப்ப மிட்டு நிறைவேற்றுவதற்கு அதிகாரமளிக்கப் பட்டுள்ளார்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்குஞ்செய்வதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(1) ஏதேனும் அத்தகைய கூட்டாட்சியாதனச் சிறுகூறைப் பயன்படுத்துதல் அல்லது இருப்பாட்சி செய்தல் தொடர்பாக அல்லது அதனோடு சார்ந்த பொதுவசதிகளை அல்லது பொது அம்சங்களைத் துய்ப்பது தொடர்பாக ஏதேனும் அத்தகைய கூட்டாட்சி யாதனச் சிறுகூறின் சொந்தக்காரருக்கும் இருப்பாட்சி யாளருக்கும் அல்லது சொந்தக்காரருக்கும் அல்லது சொந்தக்காரர்களுக்கும் அல்லது முகாமைக் கூட்டுத் தாபனத்துக்கும் சொந்தக்காரருக்கும் அல்லது சொந்தக் காரர்களுக்கும் அல்லது ஈடுபெற்றவருக்கும் சொந்தக் காரருக்கும் அல்லது ஈடுபெற்றவருக்கும் ஈடுபெற் றவர்களுக்கும் அல்லது சொந்தக்காரருக்கும் கொள் வனைகாரருக்கும் அல்லது சொந்தக்காரருக்கும் உத்தேச கொள்வனைகாரருக்கும் அல்லது ஈடுபெற்ற

வருக்கும் உத்தரச கொள்வனைகாரருக்குமிடையே ஏதேனும் பிணக்கு எழுகின்றவிடத்து, அத்தகைய பிணக்கு அத்தகைய ஆளினால் அல்லது முகாமைக் கூட்டுத்தாபனத்தினால் அதிகாரசபைக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும் ; அத்துடன் அதிகாரசபை, விடயத்துக்கேற்றாற்போல முறையான விசாரணையின் பின்னர், நீதியானதும் ஒப்புரவானதுமென அதிகாரசபைக்குத் தோன்றக்கூடியவாறான அத்தகைய கட்டளையை அத்தகைய பிணக்குத் தொடர்பில் ஆக்குதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டுப் பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

"அதிகார சபையின் பொது முகாமையாளர்

17. (1) அதிகாரசபையானது, அமைச்சரின் அங்கீகாரத்துடன் பொதுமுகாமையாளர் ஒருவரை நியமித்தல் வேண்டுமென்பதுடன் அவர் பிரதான நிறைவேற்று அலுவலராக இருத்தலும் வேண்டும்.

(2) அதிகாரசபை, எந்நேரத்திலேனும் அவ்வாறு செய்வது அவசியமானதென அது கருதினால், குறித்துரைக்கப்பட்ட காரணங்களுக்காக, அமைச்சரின் அங்கீகாரத்துடன் பொது முகாமையாளரின் நியமனத்தை முடிவுறுத்தலாம்.

(3) பொதுமுகாமையாளர், தவிசாளரின் பொதுவான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக, அதிகாரசபையின் தொழிலை நெறிப்படுத்துவதற்கும் அதிகாரசபையின் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் ஒழுங்கமைப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் அதிகாரசபை ஊழியர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டுக்கும் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(4) பொது முகாமையாளர், அதிகாரசபையின் அங்கீகாரத்துடன், அதிகாரசபையின் வேறு எவரேனும் ஊழியருக்கு அவசியமானதென அவர் காலத்துக்குக் காலம் கருதக்கூடியவாறான அவரது தத்துவங்களுள், பணிகளுள் அல்லது

கடமைகளுள் எதனையும் கையளிக்கலாம் என்பதுடன் எவையேனும் அத்தகைய தத்துவங்கள், பணிகள் அல்லது கடமைகள் அவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளவையான எவரேனும் ஊழியர் பொது முகாமையாளரின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுக்கமைவாக, பிரயோகித்தல், நிறைவேற்றுதல் அல்லது புரிதல் வேண்டும்.".

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவை நேரடியாக அடுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் இடப்படுகிறது, என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 17அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும் :—

முதன்மைச் சட்டவாக்கத்தில் 17அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

"அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல்.

17அ. (1) அதிகாரசபை அதன் பணிகளை வினைத்திறமையாக நிறைவேற்றுவதற்கு அவசியமானவர்கள் என அது கருதும் அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

(2) ஒராமுட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்களும் சேவையாளர்களும், அதிகாரசபையினால் ஆக்கப்படும் விதிகள் மூலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அமைந்தவர்களாதலும் வேண்டும்.

(3) அதிகாரசபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அத்தகைய அலுவலரினதும் பொது நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், அத்தகைய அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரச்சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(4) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையன வாதல் வேண்டும்.

(5) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையன வாதல் வேண்டும்.

(6) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கு அரசாங்கத்துக்குச் சேவையாற்றுவதற்கு உடன்பட்டுக்கொண்டுள்ள எவரேனும் ஆளை அதிகாரசபை தொழிலுக்கமர்த்துகின்றவிடத்து, அவ்வாளினால் அதிகாரசபைக்கு ஆற்றப்படும் ஏதேனும் சேவைக்காலப்பகுதி, அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கு ஆற்றப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) அதிகாரசபையின் வேண்டுகோளின் பேரில் மாகாண பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் உறுப்பினர் அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபையின் வேறு எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், விடயத்துக்கேற்றாற்போல அத்தகைய உறுப்பினர், அலுவலர் அல்லது சேவையாளரினதும் மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழு அல்லது உள்ளூரதிகார சபை

யினதும் சம்மதத்துடன் அதேபோன்ற சம்மதத்துடன் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதிகாரசபையினாலும் மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவினாலும் அல்லது உள்ளூர் அதிகாரசபையினாலும் உடன்பட்டுக் கொள்ளப் படக்கூடியவாறான ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பிலானவை உட்பட, அத்தகைய நியதி, நிபந்தனைகளின் மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(8) எவரேனும் ஆள் (4) ஆம் உட்பிரிவினை அல்லது (7) ஆம் உட்பிரிவினைப் பின்பற்றி அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய ஆள் அத்தகைய பணியாட்டொகுதியின் வேறு எவரேனும் உறுப்பினரைப் போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.".

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கஞ் செய்வதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலமும் :—

"(2) அதிகாரசபையின் நிதியத்துக்குள் பின்வருவன வரவுவைக்கப்படுதல் வேண்டும் :—

(அ) அதிகாரசபையின் பயன்பாட்டுக்கெனப் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப் படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் யாவும் ;

(ஆ) அதிகாரசபையினால் அதன் தத்துவங்களை, கடமைகளை அல்லது பணிகளைப் பிரயோகிப்பதில், புரிவதில் அல்லது நிறைவேற்றுவதில் பெற்றுக்கொள்ளப் படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் யாவும் ;

(இ) இலங்கையிலாயினுஞ்சரி இலங்கைக்கு வெளியிலாயினுஞ்சரி, எத்தன்மைத்தான எம்மூலங்களிலிருந்தேனும் நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியங்கள் வகையாக அதிகாரசபையினால் பெற்றுக் கொள்ளப்படக் கூடியவாறன அத்தகைய பணத்தொகைகள் யாவும் ; அத்துடன்

(ஈ) ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தினால், பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் அல்லது வேறு நிறுவனத்தினால் அதிகாரசபைக்குக் கைமாற்றப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் யாவும்." ; அத்துடன்

(2) இரண்டாம் உட்பிரிவை நேரே உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(2அ) அதிகாரசபையினால் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதிகாரசபையினால் உறப்படும் ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படும் அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.".

19. பின்வரும் புதிய பிரிவு முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவை நேரே உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 19அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

முதன்மைச் சட்டவாக்கத்தில் 19அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

கடன் எடுப்பதற்கு அதிகாரசபைக்குள்ள தத்துவம்.

19அ. (1) அதிகாரசபையானது, நிதியென்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் கொடுக்கப்பட்ட சம்மதத்துடனும் அத்தகைய நியதி, நிபந்தனைகளுக்கமைவாகவும் இச்சட்டத்தின் கீழ் அதிகாரசபைக்குள்ள கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக அல்லது அதன் கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்காக அதிகாரசபைக்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய பணத் தொகைகளை, மேலதிகப்பற்று வகையாக அல்லது வேறு வகையாக, தற்காலிகமாக கடன் எடுக்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும் இவ்வுட்பிரிவின் கீழ் அதிகாரசபையினால் பெறப்பட்ட எவையேனும் தற்காலிகக் கடன்கள் தொடர்பில் வெளிநிலுவையாகவுள்ள கூட்டுமொத்தத் தொகைகள், எந்நேரத்திலும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையை விஞ்சுதலாகாது.

(2) அதிகாரசபையானது, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் கொடுக்கப்பட்ட சம்மதத்துடன், (1) ஆம் உட்பிரிவின் கீழான தற்காலிகக் கடன் வகையாகவல்லாது வேறுவகையாக தொகுதிக்கடன் பத்திரங்களை வழங்குவதன் மூலம், பணம் கடன் எடுக்கலாம். இச்சட்டத்தின் கீழ் அவ்வாறு உருவாக்கப்பட்டு வழங்கப்படும் தொகுதிக்கடன் பத்திரங்கள் "கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபைத் தொகுதிக் கடன் பத்திரங்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

(3) கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபைத் தொகுதிக்கடன் பத்திரங்கள், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் கொடுக்கப்பட்ட அங்கீகாரத்தோடு அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி, நிபந்தனைகளுக்கிணங்க, வழங்கப்படுதல், கைமாற்றப்படுதல், கையாளப்படுதல், மீட்கப்படுதல் அத்துடன் நீக்கஞ்செய்யப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

"அரசாங்க உத்தரவாதம்.

20. (1) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தொகுதிக்கடன் பத்திரங்கள் மீதான முதல் தொகையின் மீள் கொடுப்பனவுக்கும் வட்டிக் கொடுப்பனவுக்கும் உத்தரவாதமளித்தல் வேண்டும்.

(2) ஒராமுட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உத்தரவாதமொன்றை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் ஏதேனும் பணத்தொகை, பாராளுமன்றத்தின் முன்னங்கீகாரத்துடன், திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) ஒராமுட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உத்தரவாதமொன்றை நிறைவேற்றுவதில் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகை, அமைச்சருடனான ஒருப்பாட்டுடன் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய காலப்பகுதியின்போதும், அமைச்சருடனான ஒருப்பாட்டுடன் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய வீதத்திலான வட்டியுடன் அதிகாரசபையினால் மீளச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) ஓராமுட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உத்தர வாதமொன்றை நிறைவேற்றுகையில் திரட்டு நிதியத்திலிருந்து, ஏதேனும் பணத்தொகை செலுத் தப்பட்டவிடத்து, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், அத்தகைய பணத்தொகை அவ்வாறு கொடுக்கப்பட்டதென்ற ஒரு கூற்றைப் பாராளுமன்றத்தின் முன்னர் வைத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

21. பின்வரும் புதிய பிரிவானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவை நேரே உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படு கின்றதென்பதுடன் அச் சட்டவாக்கத்தின் 20அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்.

"அரசியலமைப்பின் 126 ஆம் உறுப்புரைக்கமைவாக அல்லாமல் வழக்குத் தொடர்வதிலிருந்து காப்பு

20அ. (1) அரசியலமைப்பின் 126 ஆம் உறுப் புரையின் ஏற்பாடுகளுக்கமைவாக, இச்சட்டத்தின் கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப்பின் மீது அவரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது அவரால் செய்யப்பட்டதாகக்கொள்ளப் படும் ஏதேனும் செயலுக்காக அதிகாரசபையின் உறுப்பினர், அலுவலர், சேவையாளர் அல்லது முகவர் எவருக்கும் எதிராக துடர்ச்சி அல்லது குற்ற வழக்கு எதுவும் அமைதல் ஆகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அதிகாரசபையினால் அல்லது அதற்கெதிராக கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபையினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள் நிதியத்தி லிருந்து கொடுக்கப்படுதல் வேண்டும்; அத்துடன் ஏதேனும் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதிகாரசபையினால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுத்தொகைகள் நிதியத்துக்குள் வரவுவைக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துதல்.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "ஆறுமாதங்களுக்கு மேற்படாத கால மொன்றிற்கு" என்பதில் தொடங்கி அவ்வுட்பிரிவு முடிவயவுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "ஓராண்டுக்கு மேற்படாத காலமொன்றுக்கு இருவகையிலொருவகையான மறியற்றண் டனைக்கு அல்லது, பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்

பணத்துக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப் பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய தவறு தொடர்ந்து புரியப்படும் தவறொன்றெனின், குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதன் பின்னர் அத்தவறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் மேலதிகக் குற்றப்பணமாக ஆயிரம் ரூபாவுக்கும் ஆளாதல் வேண்டும்." என்னுஞ் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) "பொதுவசதிகள்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

"பொதுவசதிகள்" என்பது, நீர், சாக்கடை, வடிகால், வாயு, மின்சாரம், குப்பை கூளம் அகற்றுதல், குளிரூட்டல், தொலைபேசி, மற்றும் வானொலி என்பவையான சேவைகளும் வீதிகள், அணுகுவழிகள், புற்றரைகள், தோட்டங்கள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் வேறு வெளி இடங்கள் என்றும் பொருளாகும் ;";

(2) "பொது அம்சங்கள்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

"பொது அம்சங்கள்" என்பது, 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின்மூலம் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;";

(3) "பொது அம்சங்கள்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நேரே உடனடுத்துப் பின்னர் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

"கூட்டாட்சியாதன வரைபடம்" என்பது, 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் மூலம் அதற்குக் குறித்தொதுக்கப்பட்டவாறான பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;";

(4) "கூட்டாட்சி ஆதனம்" மற்றும் "வீடமைப்புத் திட்டம்" என்னுஞ் சொல்லமைப்புகளின் வரைவிலக்கணத்தை விட்டுவிடுவதன் மூலமும் ;

(5) "உள்ளூரதிகார சபை" என்னுஞ் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

"உள்ளூரதிகார சபை" என்பது, ஏதேனும் மாநகர சபை அல்லது பிரதேச சபை என்று பொருளாவதோடு ஏதேனும் அத்தகைய சபையினால் பிரயோகிக்கப்படும், புரியப்படும் அல்லது நிறைவேற்றப்படும் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் நேரொத்த அல்லது அவற்றையொத்த தத்துவங்களையும் கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும் நிறைவேற்றுவதற்குமென ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும் ;";

(6) "உள்ளூரதிகாரசபை" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நேரே உடனடுத்துப் பின்னர் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

"முகாமைக் கூட்டுத்தாபனம்" என்பது, கூட்டாட்சி யாதன வரைபடத்தில் அல்லது பகுதியளவிலான கூட்டாசியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட துணைப் பிரிவாக்கப்பட்ட ஏதேனும் ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கட்டிடங்கள் தொடர்பில் 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் கீழ் அத்தகைய கட்டிடங்கள் தொடர்பில் தாபிக்கப்பட்ட முகாமைக் கூட்டுத்தாபனம் என்று பொருளாகும் ;";

(7) "முகாமைக் கூட்டுத்தாபனம்" என்னும் சொல்லைப் பின் வரைவிலக்கணத்தை நேரே உடனடுத்துப் பின்னர் பின்வரும் வரைவிலக்கணங்களை இடுவதன் மூலமும் :—

"சொந்தக்காரர்" என்பது, ஒரு காணியின் உப பிரிவாக்கத்துக்கு நேர்முன்னருள்ள காணித் துண்டின் சொந்தக்காரர் என்று பொருளாகும் :

"கூட்டாட்சியாதனச் சிறுகூறின் சொந்தக்காரர்" என்பது கூட்டாட்சியாதனச் சிறு கூறில் இறையிலி சொத்துரிமை ஒன்றைக் கொண்டுள்ள அல்லது கூட்டாட்சியாதனச் சிறுகூறில் குத்தகையாட்சிச் சொத்துரிமை உருவாக்கப் பட்டுள்ளவிடத்து, அக்கூட்டாட்சியாதன சிறு கூறிலுள்ள குத்தகையாட்சிச் சொத்துரிமை, அத்தகைய குத்தகையாட்சிச் சொத்துரிமையை உருவாக்கியமை பற்றிப் பதிவுசெய்த திகதியிலிருந்து கணிக்கப்படும் இருபது ஆண்டுகளுக்குக் குறையாத முடிவுறாக் காலப் பகுதியைக் கொண்டுள்ள கூட்டாட்சியாதனச் சிறு கூறின் அப்போதைக்கான பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரர் என்று பொருளாகும் :

"சிறுகூறு" என்பது, கூட்டாட்சியாதன வரைபடத்தில் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தில் அல்லது தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்தில் தனியான கூட்டாட்சியாதன சிறு கூறொன்றெனச் சாட் டப்பட்டுள்ளதும் முழுமையாக இருப்பாட்சி செய்யப்படுவதாயினுஞ்சரி அல்லாவிடினுஞ் சரி ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அறைகளைக் கொண்டுள்ளதாய் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாடிகளைக் கொண் டுள்ள கட்டிடத்தில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாடிகளின் பாகத்தைக் கொண் டுள்ளதாய் சுதந்திரமான பயன்பாட்டுக்கென

வடிவமைக்கப்பட்டுள்ளதும் கூட்டாட்சியாதன வரைபடத்தில் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தில் அல்லது தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்தில் தனியான கூட்டாட்சியாதனச் சிறுகூறொன்றாகக் காட்டப்பட்டுள்ளதுமான வரையறுக்கப்பட்ட இடைவெளியென்று பொருளாவதோடு எதேனும் அத்தகைய வரைபடத்தில் துணைச் சிறுகூறென குறித்துரைக்கப்பட்ட சிறுகூறொன்றையும் உள்ளடக்கும் ; ஆயின், அத்தகைய வரையறுக்கப்பட்ட இடை வெளி வீதிக்கான அல்லது வீதிக்குச் செல்லும் பொதுவான இடப்பரப்புக்கான நேரடி வெளிச்செல் வசதியைக் கொண்டிருப்பதோடு அதைபொத்த விவரணத்தினதான ஏதேனும் முடியடைக்கப்பட்ட இடத்துக்கு அனுகூலமாக அணுகுவதற்கு முடியாததாக இருக்க வேண்டும் ;";

(8) "விதித்துரைக்கப்பட்ட" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நேரே உடனடுத்துப் பின்னர் பின்வரும் வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும் :—

"உத்தேச கொள்வனைகாரர்" என்பது, 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சட்டத்தினால் அதற்குக் குறித்துரைக்கப்பட்ட அதே பொருளை உடையதாக இருத்தல் வேண்டும் ;

"மாகாண சபை" என்பது, அரசியலமைப்பின் XVIIஅ அத்தியாயத்தின் மூலம் தாபிக்கப்பட்ட மாகாண சபையொன்று என்று பொருளாகும் ;

"தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடம்" என்பது, 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தில் அதற்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;";

(9) "பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை விட்டுவிடுதவன் மூலமும் ;

(10) "வதிவிடக்கூறு" என்ற சொல்லமைப்பின் வரைவிலக் கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக் கணத்தினை இடுவதன் மூலமும் :—

"வதிவிடக் கூட்டாட்சியாதனச் சிறு கூறுகள்" என்பது, கூட்டாட்சி ஆதனத்தில் அல்லது பகுதியள விலான கூட்டாட்சி ஆதனத்தில் அடங்கியுள்ள வாறான அத்தகைய வதிவிடக் கூட்டாட்சியா தனச் சிறு கூறுகள் என்று பொருளாகும் ;";

(11) "வதிவிடக் கூட்டாட்சியாதனச் சிறு கூறுகள்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நேரே உடனடுத்துப் பின்னர் பின்வரும் வரைவிலக் கணத்தை உடபுகுத்துவதன் மூலமும் :—

"பதிவாளர்" என்பது, 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க. உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுக் கூட்டாட்சி ஆதனம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனம் அல்லது தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனம் அமைந் துள்ள பதிவு மாவட்டத்தின் மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள உரித்துப் பதிவாளர் என்று பொருளாகும் :

(12) "பதிவாளர்" என்பதன் வரைவிலக்கணத்தை நேரே உடனடுத்துப் பின்னர் பின்வரும் வரைவிலக்கணங் களை உட்புகுத்துவதன் மூலமும் :—

"மாடி" என்பது, காணிச் சிறுகூறின் மேற்பரப்புக்கு கீழான மேற்பரப்பு மீது அல்லது மேற்பரப் புக்கு மேலாக அல்லது காணிச் சிறுகூறின் மேற்பரப்புக்குப் பகுதியளவில் கீழாகவும் பகுதியளவில் மேலாகாவும் ஏதேனும் வடிவத் திலான இடைவெளியைக் கொண்டுள்ளதும் அதன் அளவுப் பரிமாணங்கள் எல்லை வரையறுக்கப்பட்டிருப்பதுமான காணிச் சிறு கூறின் ஏதேனும் பாகம் என்று பொருள் ஆகும் ;

"பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடம்" என்பது, 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக் கூறுகள் சட்டத்தினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"துணைப் பிரிவாக்கப்பட்ட கட்டிடம்" என்பது, கட்டிட வரைபடத்தை அங்கீகரிப்பதற்குச் சட்டத்தினால் தத்துவமளிக்கப்பட்ட அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டாட்சி யாதன வரைபடத்தில் அல்லது பகுதியள விலான கூட்டாட்சியாதன வரைபடத்தில் அல்லது தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்தில் அடங்கியுள்ள ஏதேனும் ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கட்டிடம் என்று பொருளாகும் ;";

(13) "சிறுகுடிமனை" மற்றும் "கூறு" என்பவற்றின் வரைவிலக்கணங்களை விட்டுவிடுவதன் மூலமும் ;

(14) "துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டிடம்" என்னுஞ் சொல்லமைப்பை நேரே உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தைச் சேர்ப்பதன் மூலமும் :–

"அதிகாரமளிக்கப்படாத நிருமாணம்" என்பது, கட்டிட வரைபடத்தை அங்கீகரிப்பதற்குச் சட்டப்படி தத்துவமளிக்கப்பட்டுள்ளவரான அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட செல்லுபடி யுடைய அனுமதிப்பத்திரமொன்றில்லாமல் அல்லது இயைபான கூட்டாட்சியாதனத்துக் கென அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி யாதனத்துக்கென அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடம் தொடர்பில் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் தரப்பட்டுள்ள ஏதேனும் நியதிக்கு அல்லது நிபந்தனைகளுக்கு முரணாக, கூட்டாட்சியாதனச் சிறுகூறுக்கான அல்லது அத்தகைய கூட்டாட்சியாதன சிறுகூறு டன் சார்ந்த துணைச்சிறுகூறுக்கான ஏதேனும்

சீர்திருத்தம் அல்லது மாற்றம் என்று அல்லது பொது அம்சங்களுக்கான ஏதேனும் சீர்திருத்தம் அல்லது மாற்றம் என்று கூட்டாட்சியாதனம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனம் நிர்மாணிக்கப்படுகின்ற காணிச் சிறுகூறின் ஏதேனும் சிறு கூறாக்கம் அல்லது உபபிரிவாக்கம் என்று, உப கட்டமைப்புகளை கூட்டியெழுப்புதல் என்று, கூட்டாட்சியாதனம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனம் நிர்மாணிக்கப்படும் காணிச் சிறு கூற்றின்மீது வேலைகளை நிர்மாணித்தல் என்று அத்தகைய காணிச் சிறு கூறின் மீது, கூறுக்கு மேலாக அல்லது கூறுக்குக் கீழாக கட்டிட, எந்திரவியல், மற்றும் ஏனைய தொழிற்பாடுகளைக் கொண்டுநடாத்துதல் என்று அல்லது காணிச்சிறு கூறு அல்லது ஏதேனம் கட்டிடம் அல்லது அதற்கு ஏதேனும் கட்டமைப்பு எப்பயன்பாட்டுக்காகப் பயன்படுத்தப்பட்டதோ அப்பயன்பாட்டிலான ஏதேனும் மாற்றம் என்று பொருளாகும் ;";

முதன்மைச் சட்டவாக்கத்தில் அட்டவணையைச் சேர்த்தல்.

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவை நேரே உடனடுத்துப் பின்னர் பின்வரும் அட்டவணை இத்தால் சேர்த்துக் கொள்ளப்படுகின்றது :–

"**அட்டவணை** (பிரிவு 9இ)

i. சொந்தக்காரர் பெயர் :–
முகவரி :–

ii. தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடம் பதிவு செய்யப்பட்ட குறிப்பீடு இல. :–

iii. ஈடுபெற்றவரின் அல்லது ஈடுபெற்றவர்களின் பெயர் :–

iv. தற்போதைக்கான கூட்டாட்சியாதன சிறு கூறின் ஒவ்வொர் கட்டின் கீழ் பிணைப் பொறுப்பாக்கப்பட்ட பணத்தொகை :—

v. இடவமைதி : மாவட்டம்
பட்டினம்
தெரு
மதிப்பீட்டு இல. :

vi. தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்தின்படி மாடிகளின் எண்ணிக்கையும் ஒவ்வொரு மாடியினுள் உள்ள கூட்டாட்சியாதனச் சிறு கூறுகளின் எண்ணிக்கையும் :—

vii. .................. அன்று உள்ளவாறான முன்னேற்றம் :—."

**25.** ஐயுறவுகளைத் தவிர்ப்பதற்காக, பின்வருமாறு வெளிப்படுத்தப்படுகின்றது : — சேமிப்புகள்.

(அ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று இருந்து வருகின்ற பொதுவசதிகள் சபையின் எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் அத்துடன் ஏனைய சாதனங்களும் கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபையினால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாக, உடன்படிக்கைகளாக அல்லது வேறு சாதனங்களாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஆ) பொதுவசதிகள் சபையினால் அல்லது சபைக்கெதிராகத் தொடரப்பட்டு இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர் முந்திய நாளன்று முடிவுறாதிருக்கின்ற எல்லாத் தொடர்ச்சிகளும் வழக்குகளும் அத்துடன் ஏனைய சட்ட நடவடிக்கைகளும் கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபையினால் அல்லது அதிகார சபைக்கு எதிராகத் தொடரப்பட்ட தொடர்ச்சிகள், வழக்குகள் மற்றும் வேறு சட்ட நடவடிக்கைகளாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(இ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பொது வசதிகள் சபைக்குள்ள சகல உரிமைகளும் பொறுப்புகளும் கடப்பாடுகளும் கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபையின் உரிமைகளாகவும் பொறுப்புகளாகவும் கடப்பாடுகளாகவும் கருதப்படுதல் வேண்டும் ;

(ஈ) ஏதேனும் வழக்கில் அல்லது வழக்கு நடவடிக்கையில் ஏதேனும் நீதிமன்றத்தினால் பொதுவசதிகள் சபைக்குச் சாதகமாக அல்லது எதிராகப் பதியப்பட்ட தீர்வை, கட்டளை அல்லது தீர்ப்பு ஒவ்வொன்றும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபைக்குச் சாதகமாக அல்லது எதிராகப் பதியப்பட்ட தீர்வை, கட்டளை அல்லது தீர்ப்பு ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க வலியுறுத்தவும்படலாம் ;

(உ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிதாங்கும் பொதுவசதிகள் சபையின் அலுவலர் அல்லது சேவையாளர், அதிகார சபையின் அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவராகத் தொடர்ந்திருப்பதற்குச் சம்மதிப்பாராயின், அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர் ஒவ்வொருவரும் அத்தகைய சம்மதத்தின் தேதியிலிருந்து கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபையின் அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவராக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஊ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக விராத, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய தேதியன்று வலுவில் உள்ள, பொதுவசதிகள் சபைச் சட்டத்தின் கீழாக்கப்பட்ட, ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் இச்சட்டத்தின் கீழாக்கப்பட்ட ஒழுங்குவிதிகளாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க, இச்சட்டத்தின் கீழாக்கப்படும் ஒழுங்குவிதிகள்மூலம் திருத்தப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கஞ் செய்யப்படலாம்.

இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர் முந்திய நாளன்று பதவிவகிக்கின்ற சபையின் உறுப்பினர்கள் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அத்தகைய பதவியை வகிப்பதொழிதல்.

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக் கொண்டு இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று சபையின் உறுப்பினராகப் பதவி வகிக்கின்ற ஒவ்வோராளும், முதன்மைச் சட்டவாக்கத்தில் உள்ளது எது எப்படியிருப்பினும், இச்சட்டம் தொடங்கும் தேதியன்று பதவி வகிக்காதொழிதல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**27.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்ட மூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.